Paper ID: IC26

# "த.ஃவா துறையில் பெண் ஆலிமாக்களின் பங்களிப்பு" இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு

**MNF. Nisrin[1], BF. Sifara[2] AND AH. Rifas[3]**

[1&2] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka,

[3] Lecturer (Prob.) in Islamic Banking and Finance, Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka,

nisrin9295@gmail.com, anamsharf417@gmail.com, ahrifas@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய தூதுத்துவத்தின் பால் மக்களை அழைக்கும் பணி மனிதனின் உருவாக்கத்தின்போதே ஆரம்பமாயிற்று. த.ஃவாப் பணி சமுகத்தின் உயர்விற்கு வித்திடுவதனால் இப்பணியில் ஈடுபடுவது சமூகத்திலுள்ள அனைத்து தனிமனித, சமூக, நிறுவனங்கள் மீதும் கடமையானதாகும். முதல் மனிதன் ஆதம் (அலை) தொடக்கம் உலக முடிவுவரை நடக்கக்கூடிய ஒரு அமலாக இருந்தாலும் இன்று மக்களை நல்லநெறிகளின்பால் அழைப்பது அருகிக்கொண்டுவருகிறது. ஆய்வுப்பிரதேசமான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெண் ஆலிமாக்கள் த.ஃவா பணியில் காட்டும் ஈடுபாட்டின் அளவைக் கண்டறிதலையும், இப்பணியை மேற்கொள்ளும் போது பெண் ஆலிமாக்கள் எதிர்நோக்கும் சவால்களை இணங்காண்பதையும், பல்கலைக்கழகத்தில் த.ஃவா மூலம் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துதலையும் நோக்கங்களாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புரீதியானதாகக் காணப்படும் இவ்வாய்வின் முடிவுகளுக்காக முதலாம் நிலைத் தரவுகளான வினாக்கொத்து மற்றும் மறைமுக உரையாடல் என்பவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான பெண் ஆலிமாக்கள் இலங்கையிலுள்ள பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வந்து கற்கின்றனர். இவர்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள பல த.ஃவா அமைப்புக்களிலும் உறுப்புரிமை பெற்றவர்கள் என்பதும் நோக்கத்தக்கது. எவ்வாறிருந்தும் பல்கலைக்கழகத்துக்கு வந்து வெவ்வேறான பல கற்கைகளையும் தொடர்வதாலும், குடும்பத்தின் நெருக்கடியாலும் படிப்புச்சுமை, நேரமின்மை போன்ற காரணங்களினால் எல்லா ஆலிமாக்களும் த.ஃவாப் பணியில் ஈடுபடுவதில்லை. இதனால், இவ்வாய்வுப் பிரதேசத்தில் த.ஃவாப் பணிக்கான பெண் ஆலிமாக்களின் பங்களிப்பானது குறைவாகவே காணப்படுகிறது என்ற முடிவிற்கு வரலாம். மேலும், இப்பணிக்கான பங்களிப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**திறவுச்சொற்கள் :** த.ஃவா பணி, பெண் ஆலிமாக்கள், பங்களிப்பு, இஸ்லாம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

த.ஃவா என்பது சத்தியத்தை சத்தியமாகவும், அசத்தியத்தை அசத்தியமாகவும் உள்ளதை உள்ளபடி உண்மையை எடுத்துரைக்கின்ற ஒரு மகத்தான பணியாகும். வாழ்வின் சகல துறைகளுக்கும்

வழிகாட்டுகின்ற இஸ்லாம் மிக உயரிய பணியான இந்த அழைப்புப் பணியை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதற்கு மிக காத்திரமான வழிகாட்டுதல்களையும் வழங்கத் தவறவில்லை.

'த.்.வா' என்ற அரபுச் சொல் ''அழைப்புப் பணி அல்லது எத்திவைக்கும் பணி'' என்ற கருத்துக்களைத் தருகிறது. ஆனால், இஸ்லாமிய வழக்கில் த.்.வா என்பது இஸ்லாமிய தூதுத்துவத்தின் பால் மக்களை அழைத்தல், இஸ்லாத்தை எத்திவைத்தல் என்ற பொருளில் பிரயோகிக்கப்பட்டாலும் இலங்கையிலுள்ள வழக்கின் படி இஸ்லாத்தின்பால் பிற மதத்தவர்களை அழைப்பதற்கும் முஸ்லிம்களை இஸ்லாமிய நெறிகளின்பால் அழைப்பதற்கும் த.்.வா என்ற சொல்லே பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய தூதைக் கொண்டு அழைக்காத எந்த அழைப்பும் த.்.வாவாக கொள்ளப்படமாட்டாது. சில அறிஞர்களின் கருத்துப்படி த.்.வா என்பது பிற மதத்தவர்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதையே குறிக்கும். முஸ்லிம்களை இஸ்லாமிய நெறிகளின்பால் அழைப்பதற்கு ''இஸ்லாஹ்'' என்ற சொல்லை பயன்படுத்துவதே பொருத்தமானதாகும் என்கின்றனர்.

'உலமா' என்பது அறிஞர்களையே குறிக்கும். ஆனால், இலங்கையின் பொது வழக்கில் 'ஆலிமாத்' என்ற பதம் அரபுக் கலாசாலைகளில் இருந்து பட்டம் பெற்ற பெண்கள் அல்லது அல் ஆலிமா அரசாங்க பொதுப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கே பயன்படுத்தப்படும். த.்.வாப் பணியில் ஈடுபடுவது அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாக இருந்த போதிலும், கூட ஆலிமாக்கள் ஷரீஆவை தெளிவாகக் கற்றறிந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் மீது ஒரு விஷேட கடமையாகக் காணப்படுகிறது.

இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

> *''அல்லாஹ்வின்பால் (மக்களை) அழைத்து (தானும்) நற்செயல் செய்து நிச்சயமாக நான் முஸ்லிம்களில் உள்ளவன் என்று கூறுபவனை விட சொல்லால் மிக அழகானவன் யார்?'' (அல்குர்ஆன் 41:33)*

> *''(நபியே!) நீர் கூறுவீராக: இதுவே எனது (நேரான) வழியாகும். நான் உங்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கிறோம். அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். நான் அவனுக்கு இணைவைப்போரில் உள்ளவனும் அல்லன்''.(அல்குர்ஆன் 12:108)*

இதிலிருந்து நான் முஸ்லிம் எனக்கூறும் வார்த்தை அழகு பெற வேண்டுமென்றால் த.்.வா பணியில் நாம் ஈடுபட வேண்டும் என்பதை நாம் உணரலாம். உண்மையில் இலங்கை போன்ற பல்கலாசார நாடுகளில் செய்ய வேண்டிய ஒரு மகத்தான பணி த.்.வா பணியாகும். இது வேறு நாடுகளில் ஓரளவாவது நிறைவேற்றப்படுவதன் காரணமாகவே இஸ்லாத்தைத் தழுவுவோரின் தொகை அங்கு அதிகமாக இருக்கிறது (முஜீப் எம் ஸாலிஹ், 2012)

''உங்களின் மூலம் ஒருவர் நேர்வழி பெறுவதானது சிவந்த ஒட்டகையை விட மேலானது'' (புஹாரி : 3498) என்ற நபிமொழி த.்.வாவின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

''இன்னும் அவ்வாறே மனிதர்களிலும் பூமியில் ஊர்ந்து திரிபவற்றிலும், (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால் நடைகளிலும் அதனுடைய நிறங்கள் மாறுபட்டிருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வை அவனுடைய அடியார்களில் பயப்படுவதெல்லாம் (அவனைப் பற்றி அறிந்த) கல்விமான்கள் தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன், மிக்க மன்னிப்புடையவன்'' (*அல்குர்ஆன்*, 35:28)

இன்றைய நவீன காலத்தில் மேற்குலக சக்திகளாலும், அந்நிய மதங்களாலும், நாகரீக கலாசாரத்தினாலும் இஸ்லாத்தை இவ்வுலகில் நிலை நிறுத்துவது சவாலாக மாறி வருகின்றது. அந்நிய மதங்களால் எமது நாட்டில் கூட இஸ்லாம் சில போது முடக்கப்படுகிறது. இன்று போதனைகளாலும், கதைகளாலும் பெண்கள் தமது உணவு, உடை போன்றவைகள் கணவன் மீது எவ்வாறு கடமை என எண்ணுகின்றார்களோ அதே போல தீனின் பக்கம் மக்களை அழைப்பதும் ஆண்கள் மீது மட்டுமே கடமை என எண்ணுகின்றனர் (மௌலான அமீன் அஹ்ஸன், 2012). ஆனால், நபி (ஸல்) அவர்களுக்கு முன் வந்த நபிமார்களினது காலத்தை எடுத்துப் பார்த்தால் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் த.்வா பணியில் ஈடுபடவேண்டிள்ளது என்பது தெளிவாகும். இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையில் வித்தியாசமுண்டு. ஆனால், தான் செல்லும் பாதையை தெரிவு செய்வதில், தனது கொள்கையான தீனுல் இஸ்லாத்தை நிலை நாட்டுவதில், அதன் பாதையில் போராடுவதில், அல்லாஹ்விடத்தில் இவற்றிற்கு பொறுப்பாளியாவதில் ஆண்களைப் போலவே பெண்களும் சமமானவர்கள்.

இஸ்லாமிய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சத்தியப் பாதையில் ஆண்களைப் போலவே பெண்களும் சமமாகப் பங்கெடுத்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெண்களில் கதீஜா (றழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதில் மட்டுமல்லாமல் நபி (ஸல்) அவர்களை இஸ்லாத்தின் பக்கம் உற்சாகமூட்டக் கூடியவராகவும், அவரின் ஈமானையும் தவக்குலையும் உறுதியாக இருக்கும் படி செய்பவராகவும் இருந்தார்கள். இந்த அன்னையின் முன்மாதிரி, பெண்களுக்கு மட்டுமல்ல முழு மனித சமூகத்திற்கும் மதிப்பிற்குரிய விடயமாகும். இதனைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

*''விசுவாசங் கொண்ட ஆண்களும், விசுவாசங் கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற காரியஸ்தர்களாய் இருக்கின்றனர். அவர்கள் பிறரை நன்மையைக் கொண்டு ஏவுகிறார்கள். மார்க்கத்தில் மறுக்கப்பட்ட தீமையை விட்டும் விலக்குகிறார்கள். தொழுகையையும் நிறைவேற்றுகிறார்கள், ஸகாத்தையும் கொடுத்து வருகிறார்கள், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்பட்டு நடக்கிறார்கள். இத்தகையோர் அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவான். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன். தீர்க்கமான அறிவுடையவன்''(அல்குர்ஆன், 09:71)*

தீமைகளில் மூழ்கி நன்மைகளைத் தடுக்கும் இச்சூழலில் த.்வாவின் அவசியம் இன்றியமையாததாகும். மக்கள் நன்மைகளை விட்டு வேகமாக விரண்டோடிக் கொண்டிருக்கின்றனர். தீமைகளில் கிடைக்கும் அற்ப சுகம், உலகாதாயம் என்பவற்றால் கவரப்பட்டு தீமைகளை நோக்கி மக்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.(எஸ்.எச்.எம் இஸ்மாயில், 2010)

இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட ஹறாமான ஷைத்தானிய செயல்களின் பக்கம் மக்களைக் கவர்ந்திழுக்க கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்றன. இதற்காக பல வகையான தொலைத் தொடர்பு சாதனங்களும் அழைக்கின்றன. மக்கள் ஆபாசத்தையும், வன்முறையையும், கவர்ச்சிகளையும், வீண் கேளிக்கைகளையும் மட்டுமே மூலதனமாகக் கொண்ட இன்றைய சினிமாக்கள் சமூகத்தை சீரழிவின் பக்கம் அழைப்பு விடுக்கின்றது. இவ்வாறாக தீமைக்கான த.்வா உலகெங்கிலும் நடந்து கொண்டிருக்கின்றது. இவ்வளவு பரவலாக தீமைக்கான த.்வா நடைபெறும் பொழுது மக்களை நன்மையின்பால் அழைக்கும் பணி மாத்திரம் உயிரோட்டமிழந்து காணப்படுகின்றது. தீமையின் பக்கம் மக்கள் இழுபட்டுச் செல்லும் வேகத்தையும், அதற்காக செய்யப்படும் முயற்சிகளையும் பார்க்கும் போது நன்மையின்பால் அழைத்து தீமைக்கு எதிராக குரல் கொடுப்பது எவ்வளவு அவசியம் என்பதை விளங்க முடிகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக சூழலில் பல்லின மாணவர்களும் கல்வி கற்கின்றனர். மேலும், எமது பல்கலைக்கழக சூழலில் மாணவர்கள் பெற்றோரின் கவனத்தையும் கட்டுப்பாட்டையும் விட்டு தூரமாக இருப்பதனாலும், இங்கு கண்டுகொள்ள யாரும் இல்லை என்ற மனப்பாங்கிலும், சுதந்திரமாக தவறுகளை செய்யக்கூடியவர்களாக காணப்படுவதனை அண்மைக்கால அவதானிப்பின் மூலமாக அறிய முடிகின்றது. குறிப்பாக ஆண், பெண் தகாத தொடர்புகள், கலாசார சீரழிவுகள், இஸ்லாம் அனுமதிக்காத பயணங்கள் மற்றும் விழாக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு, இசை, சினிமா மற்றும் முறையற்ற சமூக வலைத்தளப் பயன்பாடு என்பனவும் காணப்படுகின்றன. இதனால் இங்கு த.்.வாவின் தேவை அதிகமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் சுமார் 250 க்கு மேற்பட்ட அரபுக் கல்லூரிகளில் 50க்கு மேற்பட்டவை பெண்களுக்குரியதாகும். இலங்கையில் காணப்படுகின்ற பிரசித்தி பெற்ற அரபுக்கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு வருடமும் முறையான பயிற்றுவிப்புடன் பட்டம் பெற்று ஆயிரக்கணக்கான பெண் ஆலிமாக்கள் வெளியாகின்றனர். இவ்வாறு வெளியாகின்ற ஆலிமாக்களுள் பலர் இப்பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை தொடர்கின்ற போதிலும் த.்.வா பணியில் பெண் ஆலிமாக்களின் பங்களிப்பு, ஆர்வம் மற்றும் ஈடுபாடு போன்றன இப்பல்கலைக் கழகத்தில் எடுத்துக்காட்டத்தக்கதாக இல்லை. த.்.வாக் களத்தில் அவர்களில் மிக சொற்பமான தொகையினரையே காணமுடிகின்றது. முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவுக்கு ஒரு காரணமாக இதனைக் கொள்ள முடியும். இது இவ்வாய்வின் பிரச்சினையாக கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் த.்.வா துறையில் ஆலிமாக்களின் பங்களிப்பு என்ற இத்தலைப்பு காலத்தின் தேவை கருதி இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

- தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெண் ஆலிமாக்கள் த.்.வா பணியில் காட்டும் ஈடுபாட்டின் அளவைக் கண்டறிதல்.
- இப்பணியை மேற்கொள்ளும் போது பெண் ஆலிமாக்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல்.
- இப்பணியை மேற்கொள்வதனால் மாணவ சமூகம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை இனங்காணல்.
- த.்.வா பணியின் முக்கியத்துவத்தினை பெண் ஆலிமாக்களுக்கு உணர்த்துவதன் மூலம் அவர்களை த.்.வா பணியில் ஈடுபட ஆர்வமூட்டல்.

**ஆய்வு வினாக்கள்**

1) இஸ்லாமிய சட்ட விதிகளை தெளிவாக கற்றறிந்த ஆலிமாக்கள் இப்பல்கலைக்கழகத்தில் த.்.வாவில் ஆர்வம் காட்டுகிறார்களா?
2) பல்கலைக்கழகத்தில் ஆலிமாக்கள் த.்.வா பணியை முன்னெடுத்துச் செல்லும் பொழுது முகம் கொடுக்கும் சவால்கள் யாவை?

3) அழைப்புப்பணியால் பல்கலைக்கழக மாணவ சமூகம் அடைந்துகொள்ளும் அடைவுகளும், அப்பணி இல்லாதபோது அச்சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் யாவை?
4) பல்கலைக்கழகத்தில் த.்.வா பணியை விருத்தி செய்ய முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

இத்தலைப்பைப் பொறுத்தவரை இதுவரையில் பெருமளவில் ஆய்வுகள் செய்யப்படாவிட்டாலும் கூட பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

''இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் பெண்களின் த.்.வா பங்களிப்பு: இலங்கையை மையப்படுத்திய ஆய்வு'' தொடர்பாக குருணாகலை அல்ஹாதியா பெண்கள் அரபுக் கல்லூரி மாணவியான, MFF. நுஹா என்பவரால் 2015 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் த.்.வா துறையில் பெண்களின் தேவைப்பாடு, பெண் தாயிகளின் உருவாக்கம் மற்றும் பெண் த.்.வா களங்களுக்கான செயற்திட்டங்கள் போன்றவற்றை முன்வைத்துள்ளார்.

மேலும், பல ஆக்கக்கட்டுரைகளும் இத்தலைப்பில் வரையப்பட்டுள்ளன. அந்தவகையில் அல்ஹஸனாத் மாதாந்த சஞ்சிகையில் (ஜுலை, 2012) ''இஸ்லாமிய பணியில் பெண்களின் பங்களிப்பு'' என்ற தலைப்பில் மௌலவி AJM. முனவ்வர் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் பெண்கள் த.்.வா செய்வதன் முக்கியத்துவம், த.்.வா துறையில் பெண்களின் பங்களிப்பு மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய சிந்தனை எனும் சஞ்சிகையில் (ஜுலை-செப்டெம்பர், 2008) மௌலவி அஷ்ஷெய்க் MN. நயீம் அவர்களால் வெளியிடப்பட்ட ''அல்குர்ஆனின் நிழலில் சிறுபான்மை முஸ்லிம்கள் பெற்ற த.்.வா வெற்றிகள்'' என்ற கட்டுரையில் குர்ஆன் கூறும் இஸ்லாமிய த.்.வா வரலாறுகள் மற்றும் த.்.வா பணியில் அல்குர்ஆன் ஒளிவிளக்காகத் திகழ்வது பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

மௌலவி SHM. இஸ்மாயீல் (ஸலபி) அவர்களால் எழுதப்பட்டு (செப்டெம்பர் 04, 2010) இணையத்தளத்தில் வெளியான ''அழைப்புப் பணியின் அவசியம்'' என்ற கட்டுரையில் த.்.வா துறையில் முஸ்லிம்களின் பங்களிப்பு, எவ்வாறு த.்.வாவில் ஈடுபடுவது, த.்.வாவினால் சமூகம் எதிர்நோக்கும் நன்மைகள் போன்றவற்றை பற்றி ஆராய்ந்துள்ளார்.

அஷ்ஷெய்க் AC. அகார் முஹம்மத் அவர்களால் (ஜுலை 31, 2015) இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மார்க்கக் கட்டுரையில் ''இலங்கை முஸ்லிம்களுக்கான த.்.வாவின் தேவைப்பாடும், இன்றையகால த.்.வாவில் முன்னுரிமை பெற வேண்டிய அம்சங்களும்'' போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மௌலவி முஹம்மது நூஹ் அல்தாபி (ஜித்தா) அவர்களால் (ஏப்ரல் 28, 2013) வெளியாக்கப்பட்ட ''த.்.வா களமும் த.்.வா களத்தில் தவிர்க்க வேண்டிய விடயங்களும்'' என்ற ஆய்வுக்கட்டுரையில் அந்நிய சமூகத்திற்கான த.்.வாவில் ஆலிம்கள் கடைபிடிக்க வேண்டிய அம்சங்கள் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம்நிலைத் தரவுகளைப் பயன்படுத்தினாலும் முதலாம் நிலைத்தரவுகளையே மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளான ஒழுங்கமைக்கப்பட்ட வினாக் கொத்து மற்றும் மறைமுக உரையாடல் முதலிய முறைகளுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel பயன்படுத்தப்பட்டுள்ளது.

பண்பு ரீதியானதாகக் காணப்படும் இவ்வாய்வில் சிறந்த முடிவுகளைப் பெறுவதற்காக எமது பல்கலைக்கழகத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்களில் கல்வி கற்கும் கலை மற்றும் கலாசார பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழி பீடம், முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் போன்ற மூன்று பீடங்களையும் சேர்ந்த சுமார் 520 - 550 ஆலிமாக்களில் இருந்து ஆய்வாளர்களின் வசதிகளுக்கமைய பீடங்களில் உள்ள ஆலிமாக்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு எழுமாற்று மாதிரியினை (Randomly) பயன்படுத்தி சுமார் 100 ஆலிமாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், மேலும், சரியான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக சுமார் 15 ஆலிமாக்கள் மறைமுக உரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

குறிப்பிடப்பட்ட ஆய்வுப் பிரதேசமான தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் த.ஃவா துறையில் பெண் ஆலிமாக்களின் பங்களிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆய்விற்குட்படுத்தப்பட்ட 100 மாணவிகளும் இலங்கையில் பிரசித்திபெற்ற கல் - எலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா, அல் - ஹாதியா இஸ்லாமிய நிறுவனம், அல் இமாம் அப்துல் அஸீஸ் பின் பாஸ் அரபுக்கல்லூரி, கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரி, அல் - இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, ஸஹ்வா மகளிர் கல்லூரி, பைத்துல் ஹிக்மா மகளிர் அரபுக் கல்லூரி, அல் ஜாமியதுல் ஸித்தீகிய்யா, பாத்திமா ஸஹ்ரா பெண்கள் அரபுக் கல்லூரி, ஹப்ஸா மகளிர் அரபுக் கல்லூரி மற்றும் அல் மு.ஃமினாத் பெண்கள் அரபுக் கல்லூரி போன்ற பெண்கள் அரபுக்கல்லூரிகளிலிருந்து சுமார் 4 – 8 வருடங்கள் முறையாக பயிற்றுவிக்கப்பட்ட 20 - 25 வயதுக்குட்பட்டவர்களாவர். இவர்களுள் அதிகமானவர்கள் திருமணமானவர்கள் என்பது நோக்கத்தக்கது.


பல்கலைக்கழக மாணவிகளின் ஆர்வம் மற்றும் ஈடுபாட்டுடன் த.ஃவா துறையில் அவர்களின் பங்களிப்பினை கண்டறிவதற்காக அவர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவர்களுள் அதிகமானோர் ஷரீஆ கற்கை நெறியின் மூலம் திருப்திகரமான ஷரீஆ விளக்கத்தை பெற்றுக்கொண்டதனை பின்வரும் அட்டவனையின் மூலமாக அறியலாம்.

| | **எண்ணிக்கை** | **வீதம்** |
|---|---|---|
| மிக்க நன்று | 73 | 73% |
| நன்று | 27 | 27% |
| ஓரளவு | - | - |
| குறைவு | - | - |
| **மொத்தம்** | **100** | **100%** |

அட்டவணை 1

மேற்காட்டப்பட்ட அட்டவணையை நோக்கும் பொழுது, ஆய்வுக்குட்படுத்தப்பட்டுவர்களில் பெரும்பான்மையான ஆலிமாக்கள் தமது ஷரீஆ கற்கைநெறியை மிகத் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்தவர்கள். மேலும், சிலரே அக்கற்கைநெறியை நன்று எனக் குறிப்பிட்டுள்ளதுடன் எந்தவொரு மாணவராலும் ஓரளவு என்றோ, குறைவு என்றோ குறிப்பிடப்படவில்லை. எனவே இவர்கள் அனைவரும் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.


இவர்கள் பூர்த்தி செய்த ஷரீஆ கற்கை நெறி மூலம் த.்.வா செய்வதற்கான வழிகாட்டல் கிடைத்தமை பற்றி வினவப்பட்ட போது பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் பின்வருமாறு,




வரைபடம் - 1

இந்த வரைபடத்தை அவதானிக்கும் போது, ஷரீஆ கற்கை நெறி மூலம் த.்.வா செய்வதற்கான முழுமையான வழிகாட்டல் சிறப்பாகக் கிடைக்கப்பெற்றோர் 70% ஆகவும், நன்றாக வழிகாட்டல் கிடைக்கப்பெற்றவர்கள் 23% ஆகவும் காணப்படுகின்றனர். மேலும் 5%, 2% ஆலிமாக்கள் மாத்திரமே ஓரளவு மற்றும் குறைவான விளக்கம் பெற்றவராக காணப்படுகின்றனர். பெருமளவான ஆலிமாக்கள் சிறப்பாக த.்.வா வழிகாட்டலைப் பெற்றிருப்பதனால் பல்கலைக்கழக சூழலில் த.்.வா பணியை முறையாக மேற்கொள்வதற்கான அறிவு மற்றும் நுணுக்கங்கள் அவர்களிடம் காணப்படுவது இந்த வரைபடம் மூலம் தெளிவாகின்றது.

ஆய்வு மாதிரிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆலிமாக்களிடம், அவர்கள் ஷரீஆ கற்கை நெறியை பயின்றுகொண்டிருக்கும் போது வெளிச்சமூகத்தில் த.்.வாவில் ஈடுபட்ட அனுபவத்தினை பின்வரும் முடிவுகள் காட்டுகின்றன.





வரைபடம் - 2

இவ்வரைபடத்தை நோக்கும் போது பெரும்பான்மையான (77%) ஆலிமாக்களுக்கு, அவர்கள் ஷரீஆவை கற்கும் சம காலத்திலேயே த.ஃவா பணியில் ஈடுபட்டுள்ள அனுபவம் இருப்பது புலனாகின்றது. வெறுமனே 23% ஆலிமாக்களே அவ்வாறான அனுபவம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். அதிகமானவர்கள் த.ஃவா அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பது பல்கலைக்கழகத்தில் த.ஃவாவை முன்னெடுத்து செல்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதையும் அறியமுடிகிறது.

மேலும், அவர்களின் த.ஃவாப் பணியை இரண்டு எடுகோள்களின் கீழ் நோக்கக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் சொல் சார்ந்த மற்றும் எழுத்து சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எழுத்து சார்ந்த த.ஃவா பணியைப் பொருத்த வரையில் சஞ்சிகை, பத்திரிகைகளுக்கான மார்க்க விடயங்கள் தொடர்பான கட்டுரைகளையும், ஆக்கங்களையும் அதிகமாக எழுதியிருக்கின்றனர். மேலும், சொல் சார்ந்த த.ஃவா விடயங்களைப் பார்க்கும் போது பல்வேறு வயது பிரிவினர்களுக்குமான தர்பியா நிகழ்ச்சிகள், ஊக்குவிப்பு நிகழ்வுகள், தனிநபர் வழிகாட்டல் மற்றும் தப்ஸீர் வகுப்புக்கள் போன்றவையும் இனங்காணப்பட்டன.

மேலும், இவர்கள் மத்ரஸாவின் அழுத்தம் காரணமாகவோ, குடும்பத்தினரின் அழுத்தம் காரணமாகவோ த.ஃவா பணியில் ஈடுபடவில்லை. மாறாக அவர்களின் சுய விருப்பத்தின் காரணமாகவே த.ஃவாவில் ஈடுபட்டுள்ளமை ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. ஏனெனில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆலிமாக்களுக்குள் 60% ஆனோர் ஏதேனுமொரு த.ஃவா மையத்தில் அங்கத்துவம் பெற்றவர்களாக காணப்படும் அதேவேளை, 40% ஆனோர் அங்கத்துவமற்றவராகவும் காணப்படுகின்றனர். அதே போன்று எமது பல்கலைக்கழகத்தில் த.ஃவா பணியை மேற்கொள்வதற்காக முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஹித்மத் அத்- த.ஃவா இஸ்லாமிய்யா பற்றியும் ஆலிமாக்களிடம் வினவப்பட்ட போது பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.




வரைபடம் - 3

எனவே, மேற்படி முடிவுகளினடிப்படையில் எமது பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற மேற்படி அமைப்புக்களின் பங்களிப்பு த.ஃவா துறையில் குறைவாக இருப்பது தெரிய வருகிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த போது அதிகளவான மாணவர்கள் அதிகமாக பல்கலைக்கழகக் கற்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புக்களில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் த.ஃவாவில் அதிகமாக ஆர்வம் காட்டாமல் இருப்பதும், முஸ்லிம் மஜ்லிஸினால் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்ற த.ஃவா நிகழ்வுகளில் மாணவர்களின் பங்களிப்பு வீதம் மிகக் குறைவாக இருப்பதும், வெவ்வேறு பீடங்களில் கல்வி கற்கும் மாணவர்களை ஒரே நேரத்தில் நிகழ்வுகளில் ஒன்றுசேர்க்க முடியாமையும் இதற்கான முக்கிய காரணங்களாக காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், ஆலிமாக்கள் த.ஃவாப் பணியை பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்து செல்லும் போது பல்வகையான சவால்களுக்கும் முகம் கொடுக்கின்றனர் என்பது புலனாகிறது. சில சந்தர்பங்களில் இச்சவால்கள் ஆலிமாக்களை த.ஃவா பணியை முற்றாக கைவிடுவதற்கும் காரணிகளாகின்றன.


பொதுவாக பெண் ஆலிமாக்களை எடுத்து நோக்கினால் அதிகமானோர் அவர்களின் ஷரீஆ கற்கைநெறியை நிறைவு செய்ததும் திருமண பந்தத்தில் இணைவதால் இப்பணியை மேற்கொள்வதில் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். இதனால் குடும்பச்சுமை, பொறுப்புக்கள், கணவன் மற்றும் கணவனின் குடும்பத்தினரின் விருப்பமின்மை, பிள்ளை வளர்ப்பு, கற்கை தவிர்ந்த ஏனைய நேரங்களை இவர்கள் தங்களது கணவன்மார்களோடும் குடும்பத்தோடும் செலவழித்தல் மற்றும் அதிக வேலைப்பளு போன்றவற்றினால் த.ஃவா செய்வதற்கான வாய்பை இழக்கின்றனர். எனவே, திருமணம் முடித்தல் அல்லது திருமணம் முடித்திருத்தல் பல்கலைக்கழக வாழ்வில் ஆலிமாக்களின் த.ஃவா பணிக்கு ஒரு தடையாக அமைந்திருப்பது தெளிவாகிறது.

மேலும், இன்னுமொரு தரப்பினர் உயர்கல்விக்காக பல்கலைக்கழகத்தைத் தாண்டி வேறு கல்விநிறுவனங்களையும் நாடி மேலதிக பகுதிநேர கற்கைநெறிகளையும் தொடர்வதால் இவர்கள் படிப்புச்சுமை, நெருக்கடியான நேர அட்டவணை, நேரமின்மை, வேலைப்பழு, ஆர்வமின்மை, கடமையை உணராமை, அலட்சிய உணர்வு போன்றவற்றை காரணம் காட்டி த.ஃவாப் பணியில் ஈடுபடுவதை விட்டும் விலகி நிற்கின்றமை தெரியவந்துள்ளது. அறபுக் கல்லூரிச் சூழலில் இருக்கும் போது த.ஃவாவானது ஷரீஆவுடன் தொடர்பான பாடத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தமையால்

த.்.வாவில் ஈடுபடுவது சாத்தியப்பாடு கூடிய ஒரு விடயமாக இருந்தது. ஆனால் பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால் ஷரீஆ கல்வி தவிர்ந்த ஏனைய பாடங்களும் அதிகமாக உள்வாங்கப்பட்டிருப்பதால் அதற்காக முழு ஈடுபாட்டை வழங்க வேண்டி இருப்பதனாலும் த.்.வாவுடனான தொடர்பு குறைகின்றது.

அதுமட்டுமல்லாமல், பெண்கள் என்ற வகையில் ஆண்களைப்போல வெளிச் சமூகத்துடன் கலந்து செயற்படுவது கடினமாகக் காணப்படுவதனாலும் குடும்பப் பொறுப்புக்களை அதிகமாக சுமப்பதனாலும் பல்கலைக்கழகத்தில் த.்.வா நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டுவது கடினமான விடயம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் பல்கலைக்கழகம் என்றாலே அது சுதந்திரமாகச் செயற்படக் கூடிய ஒரு இடம் என்ற எண்ணம் அவர்களின் மனதில் ஆழமாகப் பதியப்பட்டிருப்பதால் இஸ்லாத்தின் பாலும் நல்ல விடயங்களின்பாலும் அழைத்தாலும் அது எடுபடக்கூடியதாக இல்லை. மேலும், இப்பல்கலைகக்ழகத்தில் கல்வி கற்கின்ற ஒரு சில ஆலிமாக்களின் தவறான நடத்தைகள், தவறான தொடர்புகள், காதல் போன்றன காரணமாக ஏனைய மாணவர்கள் ஆலிமாக்களுக்கு மரியாதை மற்றும் கண்ணியம் செலுத்த மறுப்பது மட்டுமல்லாமல் மாணவர்கள் மத்தியில் இவர்கள் த.்.வா செய்வதற்கு தகுதியற்றவர்கள் என்ற எண்ணப்பாடு காணப்படுவதனாலும் ஆலிமாக்களின் கருத்துக்கள் அதிகம் எடுபடுவதில்லை என்பது ஆய்வின் மூலம் தெளிவாகியுள்ளது.

ஆலிமாக்கள் மத்தியில் ஒற்றுமையின்மை, குறிப்பாக அனைத்து மாணவிகளும் கிட்டத்தட்ட சம வயதையுடையவர்கள் என்பதனாலும் அவர்களின் கருத்துக்கள் எடுபடுவது குறைவாக காணப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் அவர்கள் பல்வேறு ஷரீஆ ரீதியான கொள்கைகள், வித்தியாசமான இயக்கங்களை சார்ந்திருப்பதனாலும் கருத்து முரண்பாடுகள் அதிகமாக ஏற்படுவதன் காரணமாகவும் த.்.வா பணியை முன்னெடுப்பதில் எமது பல்கலைக்கழக ஆலிமாக்கள் பின்வாங்குகின்றனர். இதனால் பெண் ஆலிமாக்களில் குறிப்பிட்ட சிலரே இச்சவால்களையும் தாண்டி இப்பணியில் ஈடுபடுகின்றனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆலிமாக்களிடம் பல்கலைக்கழக காலத்தில் அவர்கள் த.்.வா பணியில் ஈடுபட்டமை தொடர்பாக மறைமுக உரையாடல் மூலமும் ஆராயப்பட்ட போது பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.





வரைபடம் 4

எமது பல்கலைக்கழகத்தில் 37% ஆலிமாக்கள் மாத்திரமே த.்.வா பணியில் ஈடுபட்டுள்ள அதே வேளை 63% வீதமான ஆலிமாக்கள் அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இவர்கள் த.்.வா பணியினை முன்னெடுத்துச் செல்லும் போது எதிர்நோக்கும் சவால்களே இதற்கான காரணங்கள் என கண்டறியப்பட்டுள்ளன. இவர்கள் பல்கலைக்கழகத்துக்கு முற்பட்ட காலத்தில் சிறப்பாக த.்.வா

பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட தமது பல்கலைக்கழக காலத்தில் த.்.வா பணியில் காட்டியுள்ள ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது.

மேலும், முஸ்லிம் அல்லாதவர்களும் எமது பல்கலைக்கழகத்தில் கற்கின்றனர் என்ற அடிப்படையில் அவர்களுக்கும் இஸ்லாத்தை எத்தி வைப்பது எமக்கு கடமையாகிறது. அந்த வகையில் முஸ்லிம் அல்லாத நண்பர்களுடன் இஸ்லாம் பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பத்தை பல்கலைக்கழகத்தில் அமைத்துக் கொண்டது பற்றி ஆலிமாக்களிடம் கேட்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற தகவல்கள் பின்வருமாறு.




வரைபடம் 5

இவ்வரைபடத்தை அவதானிக்கும் போது 73% வீதமான அதாவது பெரும்பான்மையான ஆலிமாக்கள் பிற மதத்தவர்களிடம் இஸ்லாம் மதம் பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொள்ளவில்லை என்பது தெளிவாக புலனாகின்றது. வெறுமனே 27% வீதமான ஆலிமாக்களே இதனை கடமையாக நினைத்து த.்.வாவில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு த.்.வா துறையில் ஈடுபடாத ஆலிமாக்களிடம் அதற்கான காரணங்களை கேட்ட போது, பல்வேறு விதமான காரணங்களை இனங்காண முடிந்தது. அவற்றுள் குறிப்பாக மொழிப்பிரச்சினை, கலாசார வேறுபாட்டினால் நட்புக்கொள்ளாமை, நேரமின்மை, வித்தியாசமான பீடங்கள் மற்றும் தொடர்பின்மை போன்ற விடயங்கள் கண்டறியப்பட்டன.

**முடிவுரை**

ஆய்வுப்பிரதேசமான தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் த.்.வா துறையில் ஆலிமாக்களின் பங்களிப்பு பற்றிய எமது ஆய்வில், மிகத்திருப்திகரமான ஷரீஆ விளக்கத்தையும் த.்.வா செய்வதற்கான சிறந்த வழிகாட்டல்களையும் பெற்றநிலையிலுள்ள ஆலிமாக்கள் அதிகமுள்ளனர். மேலும், ஏனைய பல்கலைக்கழகங்களைப் போலல்லாமல் முஸ்லிம் மாணவர்களை பெரும்பாலானோராகக் கொண்ட ஓர் பல்கலைக்கழகமாக இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் காணப்படுவதால் இப்பல்கலைக்கழகத்தில் இயங்கிவருகின்ற முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புக்கள் ஆலிமாக்களையும் உள்ளடக்கி நன்றாக இயங்குகின்றன.

மேலும், இவ்வாலிமாக்களில் பெருந்தொகையானோர் வெளிச்சமூகத்திற்கான த.்.வா பணியில் சுய விருப்பத்துடன் ஈடுபட்ட அனுபவம், பல்கலைக்கழக ஆலிமாக்களுள் சுமார் 60% வீதமானோர் ஏதேனும் ஓர் த.்.வா மையத்தில் அங்கத்துவம் பெற்றவர்களாகவும், அவை மூலம் பல்வேறு மார்க்க நிகழ்வுகளை ஏற்பாடுசெய்த அனுபவம் மற்றும் ஏற்பாடுசெய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அவர்கள் த.்.வாவில் ஈடுபாடு காட்டாமைக்கு திருமணம், சமவயது, படிப்புச் சுமை, இயக்கச்சார்பு,

வித்தியாசமான கற்கைநெறிகளை தொடர்தல், பகுதிநேர கற்கைநெறிகள், முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புக்களில் நிர்வாகிகளாக உள்ளவர்களின் சுறுசுறுப்பின்மை போன்ற பல காரணங்கள் செல்வாக்குச்செலுத்துகின்றன. இருந்தபோதிலும் இச்சவால்களையும் தாண்டி த∴வா துறையில் பலர் ஆர்வமாகயிருந்தாலும் இப்பல்கலைக்கழகத்தில் த∴வா பணியில் அவர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகிறது. த∴வாவுக்கான பங்களிப்பு வீதம் குறைவாக இருப்பது ஓர் ஆரோக்கியமானதல்ல. இது முழு முஸ்லிம் பெண் சமூகத்திற்கும் ஒரு பெரும் இழப்பாக காணப்படுகிறது. ஏனெனில், திட்டமிடப்பட்ட த∴வாப் பணியின்மையே இன்றைய முஸ்லிம் சமுகத்தின் பிளவுகளுக்கு பிரதான காரணம் என்றால் மிகையாகாது.

ஆனால், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை பொறுத்த வரையில் இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் இருந்தும் ஆலிமாக்கள் வந்து உயர் கல்வியைத் தொடர்வதனால், பல்கலைக்கழகத்திலுள்ள த∴வா அமைப்புக்களை பலப்படுத்தி ஆலிமாக்கள் மூலம் பெண்கள் சமுகத்தில் த∴வாப்பணி மூலம் முறையான வழிகாட்டல் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அது அவர்களை மட்டுமன்றி அவர்களின் பிரதேசங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தி முழு சமூகத்தையும் சீர்திருத்தும் என்பதில் ஐயமில்லை.

**ஆலோசனைகளும், பரிந்துரைகளும்**

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவின் படி எமது பல்கலைக்கழகத்தில் பெண் ஆலிமாக்களை த.்.வாப் பணியில் சிறப்பாக ஈடுபடவைக்க பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

- ❖ அறபுக்கல்லூரிகளில் இருக்கும் போது த.்.வாவில் காட்டுகின்ற ஆர்வமும், அக்கறையும், கவனமும் எங்கு சென்றாலும் இருக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சியை ஆலிமாக்களின் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

- ❖ இப்பல்கலைக்கழகத்தைப் பொருத்தவரையில் த.்.வாப் பணியானது முக்கிய தேவைகளில் ஒன்று என்பதையும், அவர்கள் ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்பதையும் ஆலிமாக்களுக்கு உணர்த்த வேண்டும்.

- ❖ பல்கலைக்கழகத்தில் காணப்படக்கூடிய த.்.வா அமைப்புக்களினால் மாணவிகளுக்குப் பொருந்தும் வகையில் மார்க்க விடயங்கள் ஏற்பாடுசெய்யப்படுவதுடன் பொருளாதாரத் தேவைகளுக்கு முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புக்கள் ஆலிமாக்களுக்கு உதவியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

- ❖ அனைத்து இன மாணவ மாணவிகளையும் ஒன்று சேர்க்கும் விதமாக பல்கலைக்கழகத்தில் பொதுவான விழாக்கள் மற்றும் நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டு எல்லா மதங்களையும் அறிந்துகொள்வதன் மூலம் சமூக நல்லிணக்கத்திற்கும், சகோரத்துவத்திற்கும் வழிவகுக்க வேண்டும்.

- ❖ த.்.வா என்பது வெறும் மேடைப் பேச்சுக்களோ பயான் நிகழ்வுகளோ மட்டுமல்ல. மாறாக, தான் தெளிவாக அறிந்த மார்க்க விடயங்களை நவீன ஊடகங்களைப் பயன்படுத்தி பிறருக்கு எத்திவைக்கலாம். மேலும், குடும்பச்சுமை மற்றும் வேலைப்பழு காரணமாக த.்.வாவில் ஈடுபடாத ஆலிமாக்கள் தங்களின் சக்திக்கும் இயலுமைக்கும் வசதிக்கும் உட்பட்ட வகையில் த.்.வா பணியை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**


- இஸ்மாயில், எஸ்.எச்.எம். (2014). த.்.வா பணியின் அவசியம் (தொடர்-02). (online) Available: www.ismailsalafi.com (Accesed): (29.05.2017)
- நுஹா, எம். எப். எப். (2015). இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் பெண்களின் த.்.வாப் பங்களிப்பு. குருணாகலை: அல்ஹாதியா பெண்கள் அரபுக் கல்லூரி.
- நயீம், எம்.எம். (2008). அல்குர்ஆனின் நிழலில் சிறுபான்மை முஸ்லிம்கள் பெற்ற த.்.வா வெற்றிகள். இலங்கை: இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகை.
- பிர்தௌஸி, எஸ்.வை. (2014). த.்.வாவின் முக்கியத்துவம். (online) Available:jubaildawahtamil.blogspot.com (Accesed): (05.06.2017)
- பவாஸ், இஸட்.ஏ.எம். (2012). அழைப்புப் பணியின் அத்திவாரம் சகோதரத்துவம். அல்ஹஸனாத் மாதாந்த சஞ்சிகை. மலேசியா: சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம்

- முனவ்வர், ஏ.ஜே.எம்.(2012). இஸ்லாமிய பணியில் பெண்களின் பங்கு. அல்ஹஸனாத் மிலேனிய சஞ்சிகை. இலங்கை ஜமாத்தே இஸ்லாமி. http://www.alhasanath@net
- அஸ்ஸாம், ஏ.ஏ. (2008). த.ஃவதுல் குர்ஆன். அல்ஹஸனாத் வெளியீட்டகம். இலங்கை.
- அஸ்ஸால், அ. (2000). முஸ்லிம் சிறுபான்மையும் இஸ்லாமிய த.ஃவாவும். இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகை. இலங்கை
- அகார் முஹம்மத், ஏ.ஸீ. (2015). இன்றைய த.ஃவாவில் முன்னுரிமை பெற வேண்டிய அம்சங்கள். (online) Available:www.sheikhagar.org (Accesed) :( 03.06.2017)
- அல்தா.ஃபி, எம்.என். (2013). த.ஃவா களமும் தவிர்க்கப்பட வேண்டியவைகளும். (online) Avaialble:www.islamkalvi.com (Accesed): ( 05.06.2017 )